08.02.2017

தினமணி

# நுண்ணுயிர் பாசன வேளாண் சாகுபடி ஆலோசனைக் கூட்டம்



ஆயக்கட்டுப் பாசன பகுதிகளில் நுண்ணுயிர் பாசனம் மூலமாக வேளாண் சாகுபடி செய்வது குறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறை சார்பில் சமுதாய நீர்ப்பாசன அமைப்பு செயல்படுத்துவது தொடர்பாக பங்குதாரர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கால்வாய், ஆற்றில் இருந்து நீரை எடுத்து வந்து நுண்ணீர்ப் பாசனம் மூலமாக சாகுபடி செய்வது தொடர்பான சமுதாய நீர்ப் பாசன அமைப்பை எவ்வாறு செயல்படுத்துவது, எந்தெந்த

இடங்களில் செயல்படுத்துவது போன்ற விவரங்கள் விவாதிக்கப்பட்டது. இத்திட்டத்தை செயல்படுத்துவதன் நோக்கம், திட்டத்தின் அவசியம், முறைகள் குறித்து கூறப்பட்டது. கீழ்பவானி பாசன கால்வாய், தடப்பள்ளி - அரக்கன் கோட்டை, காளிங்கராயன் கால்வாய் பகுதி, மேட்டூர் வலதுகரை பகுதிகளில் சமுதாய நீர்ப் பாசன அமைப்பை செயல்படுத்த திட்ட வரைவுகள் தயாரித்து அரசுக்குப் பரிந்துரைக்கலாம் என மாவட்ட ஆட்சியர் பிரபாகர் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஜெயின் நுண்ணீர்ப் பாசன நிறுவனம், நெட்டாபிம் நுண்ணீர்ப் பாசன நிறுவனம், ஈபிசி நுண்ணீர்ப் பாசன நிறுவனங்களைச் சார்ந்த அதிகாரிகள் தங்களது நிறுவனங்களின் மூலமாக சமுதாய நீர்ப்பாசன அமைப்புத் திட்டங்கள் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட முறைகள், அதன் மூலமாக பயனடைந்த நிலப்பரப்பு, விவசாயிகள் விவரம், திட்டத்தின் பயன்கள் ஆகிய விவரங்கள் விளக்கிக் கூறப்பட்டது. நீர் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பாண்டியன் பேசுகையில், திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக விரிவான அறிக்கை தயாரிக்கும்போது மண்ணின் நீர் சேகரித்து வைக்கும் தன்மை போன்றவற்றை கணக்கில் கொண்டு திட்ட அறிக்கையைத் தயாரிக்கலாம் என்றார்.இதில், தோட்டக்கலை துணை இயக்குநர் ப.தமிழ்செல்வி, அதிகாரிகள் பங்கேற்றனர்.